




கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பிரதமரின் பயிர் காப்பீடு திட்டம் தொடர்பாக, மாவட்ட அளவிலான வங்கியாளர்கள் சிறப்பு கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்ட அரங்கில் இன்று (14.10.2016) நடைபெற்றது.

செ.வெ.எண்: 721/2016 நாள்: 14.10.2016

**பிரதமரின் பயிர் காப்பீடு திட்டம் தொடர்பாக மாவட்ட அளவிலான வங்கியாளர்கள் கூட்டம்**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (14.10.2016) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பிரதமரின் பயிர் காப்பீடு திட்டம் தொடர்பாக மாவட்ட அளவிலான வங்கியாளர்கள் சிறப்பு கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்ட அரங்கில் இன்று (14.10.2016) நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

கூட்டுறவு சங்கங்களிலும் வங்கிகளிலும் பயிர் கடன் பெறும் விவசாயிகள் அனைவரும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும் எனவும், இதர விவசாயிகளையும் அதிக அளவில் இத்திட்டத்தில் சேரச்செய்ய வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

பின்னர் தேசிய வேளாண்மை காப்பீடு நிறுவன உதவி மேலாளர் திருமதி.பிரசிதா அவர்கள் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து தெரிவிக்கையில்:-

ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வந்த பயிர் காப்பீடு திட்டங்களை மேம்படுத்தி அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பிரதமரின் பயிர் காப்பீடு திட்டம் கடன் பெறும் விவசாயிகளுக்கு கட்டாயமானது ஆகும். இதர விவசாயிகள் விருப்பத்தின் அடிப்படையில் இத்திட்டத்தில் சேரலாம் என தெரிவித்தார்கள்.

கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் திரு.நா.இளங்கோ, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு.ரா.இராஜேந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை) திரு.எம்.நிஜாமுதீன், வேளாண்மை துணை இயக்குநர்கள் திரு.சந்திரசேனன்நாயர், திரு.மோ.இராஜகுமார், தோட்டக்கலை துணை இயக்குநர் திரு.அசோக்மேக்ரின், முன்னோடி வங்கி மேலாளர் திரு.விஸ்வநாதன், நபார்டு வங்கியின் உதவி பொது மேலாளர் திரு. மார்டின் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் அலுவலர்கள், தனியார் வங்கி அலுவலர்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.